தமிழ்நாடு சட்டப் பேரவை

செவ்வாய்க்கிழமை, 1974 ஜனவரி 22.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **புலவர் கா. கோவிந்தன்** அவர்கள் தலைமையில் பேரவை **கூடியது.**

1. வினாக்கள்—விடைகள்.

வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 61, 62, 63, 64, 65 **ஆகிய** எண்கள் உள்ள வினாக்கள் பிறகு எடுத்துக் கொள்ளப்படும்.

Bagalur Primary Health Centre

* 66 *Q.*—Thiru K. S. KOTHANDARAMIAH : Will the Hon the Minister for Health be pleased to state—

(*a*) whether there is a proposal to construct a shed for the stay of persons who bring the patients to the Primary Health Centre at Bagalur in Hosur taluk during nights; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : பாகலூர் தொடக்க நல்வாழ்வு நிலையத்தில் ஆரம்பச் சுகாதார நிலையக் கொட்டகையொன்று கட்ட மதிப்பீட்டுக்குழு பரிந்துரைத்திருக்கிறது. ஆனால், இது தேவைதானா என்பது அரசின் ஆய்வில் இருக்கிறது.

Thiru K. S. KOTHANDARAMIAH : The primary health centre at Bagalur is working very well and people are coming to that centre not only from this State but also from the neighbouring State of Mysore, because the doctors there are doing good work. But when people bring patients including children and ladies, there is no place even to sit there; they have to sit under the trees or in the road. The doctors told me that the matter may be represented to Government. May I know from the hon. Minister whether he would take steps to provide a shed at the primary health centre for the stay of people.

[1974 சனவரி 22

THE HON. THIRU K. ANBAZHAGAN : It is reported that the average number of out-paients treated in this centre is only 66 per day. In other primary health centres it ranges between 200 to 300 and the number of inpatient per day is not even one. Therefore the suggestion given by the Estimates Committee is to be scrutinised further and if there is absolute necessity, then only we will be able to implement it.

மருத்துவர்கள், செவிலியர்கள் ஹஜ்ஜிப் பயணம்

*67 வின—திரு. கே. ஏ. வகாப்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா.—

(அ) 1973-ல் ஹஜ்ஜிப் பயணம் செய்து பணிபுரிய எத்தனை டாக்டர்கள், நர்சுகள் மனுச் செய்தனர் ?

(இ) இவர்களில் எத்தனை பேருக்கு வாய்ப்பளிக்கப்பட்டது ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) 1973-ல் ஹஜ்ஜி பயணம் சென்று பணிபுரிய மனு செய்தவர்கள் எண்ணிக்கை:

டாக்டர்கள்	..	32
மருந்தாளுநர்கள்	..	14
நர்சுகள்	..	10

(இ) ஒருவரும் தேர்ந்தெடுக்கப்படவில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி: ஹஜ் யாத்திரை செல்பவர்களை ஏற்றிக் கொண்டு பம்பாயிலிருந்து ஒவ்வொரு ஆண்டும் ஒரு கப்பல் செல்கிறது. அதில் தமிழ்நாட்டைச் சேர்ந்த யாத்திரிகர்களுடைய உதவிக்காக டாக்டர்கள், மருந்தாளுநர்கள், நர்சுகள் போன்றவர்களை அனுப்பி வைக்க மாநில அரசு ஏதாவது ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, மத்திய அரசு அந்தப் பயணிகளுக்கு உதவி செய்வதற்காக டாக்டர்கள், மருந்தாளுநர்கள், நர்சுகள் ஆகியோரைத் தேர்ந்தெடுத்து அனுப்புகிறார்கள். ஒவ்வொரு மாநிலத்திலிருந்தும் ஒரு பட்டியல் கேட்கிறார்கள். அந்தப் பட்டியல் கேட்பதையும் கடைசி நேரத்தில் கேட்கிறார்கள். 20 நாட்கள், 30 நாட்களுக்கு முன்னர் பட்டியல்